**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**
**அன்னூர்.**

**முன்னிலை:** திருமதி. வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், அன்னூர்.

2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 15–ம் நாள் புதன்கிழமை.
2057 திருவள்ளுவராண்டு சித்திரை மாதம் 2–ம் நாள்.
**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 106/2024**
(CNR.No.: **TNCB21-002574-2024**)

*வழக்கு விசாரணை விபரங்கள்*

| குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 106(1)–ன் படியான விவரப்பட்டியல் | | |
|---|---|---|
| 1) | வழக்கு எண். | சி.சி.எண். 106/2024. |
| 2) | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | அன்னூர் காவல் நிலைய குற்ற எண். 28/2024. |
| 3) | குற்றம் சாட்டப்பட்டவரின் பெயர் | அம்மாசை (49/2024),<br>த/பெ. பொன்னன்,<br>134, பொன்மேடு, நொச்சிகுட்டை,<br>புஞ்சை புளியம்பட்டி,<br>ஈரோடு – 638 459. |
| 4) | தந்தையாரின் பெயர் | |
| 5) | தொழில் | |
| 6) | இருப்பிட முகவரி | |
| 7) | வயது | |
| 8) | சம்பவ தேதி | 10.01.2024. |
| 9) | புகார் அளிக்கப்பட்ட தேதி | 11.01.2024. |
| 10) | கைது செய்யப்பட்டிருப்பின் அதன் தேதி | 12.01.2024. |
| 11) | பிணையில் விடுவிக்கப்பட்ட தேதி | 12.01.2024. |
| 12) | விசாரணைக்கு அனுப்பப்பட்ட தேதி | ----------- |
| 13) | விசாரணை தொடங்கப்பட்ட தேதி | 25.06.2025. |
| 14) | வழக்கு விசாரணை முடிவுற்ற தேதி | 09.04.2026. |
| 15) | தண்டனை (அ) உத்தரவு தேதி | 15.04.2026. |
| 16) | தண்டனை (அ) உத்தரவு | பா.ந.சு.ச சட்டப் பிரிவு 278(1)இன் கீழ் விடுதலை செய்யப்பட்டார். |
| 17 | கால தாமதத்தின் அம்மாசை (49/2024), | ----------- |


VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:49:33 +0530

| | | |
|---|---|---|
| | த/பெ. பொன்னன்,<br>134, பொன்மேடு, நொச்சிகுட்டை,<br>புஞ்சை புளியம்பட்டி,<br>ஈரோடு – 638 459.விளக்கம் | |

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு **- R.O.C.No.814/2020/RG/F1** நாள் **07.04.2021-**ன் படி)

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | குற்றம் சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | இல்லை. | | |
| 2) | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 16.11.2024. | | |
| 3) | வழக்கு அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | -------- | | |
| 4) | பாரதிய நகரிக் சுரக்ஷா சன்ஹிதா சட்ட பிரிவு **263**ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | 25.06.2025. | | |
| 5) | பா.ந.சு.ச. சட்ட பிரிவு 355யை போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | --------- | | |
| 6) | விசாரணைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் அதன் உத்தரவு தேதி | **சாட்சிகள்** | **முதல் விசாரணை** | **குறுக்கு விசாரணை** |
| | | **அ.சா.1** | 25.11.2025 | 25.11.2025 |
| | | **அ.சா.2** | 25.11.2025 | – |
| | | **அ.சா.3** | 25.11.2025 | 25.11.2025 |
| | | **அ.சா.4** | 16.03.2026 | 16.03.2026 |
| | | **அ.சா.5** | 16.03.2026 | 16.03.2026 |
| | | **அ.சா.6** | 16.03.2026 | 16.03.2026 |
| 7) | குற்றம் சாட்டப்பட்டவரிடம் பா.ந.சு.ச. பிரிவு 351ன் கீழ் வினவப்பட்ட தேதி | 09.04.2026. | | |



VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:49:42 +0530

| | | |
|---|---|---|
| 8) | குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்திற்கு வரத் தவறி அவருக்கு பிடியாணை வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பான தகவல்கள் | இல்லை. |
| 9) | மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் தடை உத்தரவு வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பான தகவல்கள் | --------- |

VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:49:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**
**அன்னூர்.**

**முன்னிலை:** திருமதி. வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், அன்னூர்.

2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 15–ம் நாள் புதன்கிழமை.
2057 திருவள்ளுவராண்டு சித்திரை மாதம் 2–ம் நாள்.
**ஆண்டு பட்டிகை வழக்கு எண் 106/2024**
(CNR.No.: **TNCB21-002574-2024**)

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,
அன்னூர் காவல்நிலையம்,
குற்ற எண் – 28/2024, ச/பி.279, 304–A இ.த.ச. ... குற்றமுறையீட்டாளர்

– எதிர்–

அம்மாசை (49/2024), த/பெ. பொன்னன்,
134, பொன்மேடு, நொச்சிகுட்டை,
புஞ்சை புளியம்பட்டி, ஈரோடு – 638 459. ... எதிரி

இவ்வழக்கானது கடந்த 16.11.2026–ம் தேதியன்று ஆண்டு பட்டிகை வழக்கு எண். 106/2024 ஆக இந்த நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 1 திரு.அக்பர் ராஜா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.சாந்தகுமார், அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இவ்வழக்கில் வழக்காவணங்கள், சாட்சிய சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலணை செய்த பின்பு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது அன்னூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் பா.ந.சு.ச. பிரிவு 193(2)ன் கீழ் குற்ற எண். 28/2024–ல் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304–Aஇன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

**2. அரசு தரப்பு வழக்கு**

கடந்த 10.01.2024-ம் தேதி இரவு 19.20 மணிக்கு அன்னூர் காவல் நிலைய சரகம், அன்னூர் - சத்தி ரோட்டில் முனியப்பன் கோவில் அருகே சாலமன்ராஜா என்பவர் TN 37 CY 8994 என்ற பதிவெண் கொண்ட HERO PASSION PRO இரு சக்கர வாகனத்தில் கிழக்கிருந்து மேற்காக ரோட்டை கடக்க வேண்டி ரோட்டோரமாக நின்று கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரியான அம்மாசை என்பவர் TN 37 AM 1188 என்ற பதிவெண் கொண்ட SUPRIME ISUIO என்ற நான்கு சக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலமன் ராஜா என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி அதன் தொடர்ச்சியாக அவர் இறந்து போக எதிரி காரணமாக இருந்துள்ளதால், எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304-A பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** வழக்கு கோப்பினை ஆராய்ந்து இந்த வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் இந்த வழக்கானது அட்டவணை வழக்கு எண்.106/2024 ஆக கோப்பிற்கு


VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:50:17 +0530

எடுக்கப்பட்டுள்ளது. எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டு அதன் அடிப்படையில் எதிரி முன்னிலையானதும் இந்த வழக்கு கோப்பு தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் பா.ந.சு.ச பிரிவு 230–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய அவகாசம் வழங்கிய பின்னர் எதிரிக்கெதிரான இ.த.ச பிரிவுகள் 279, 304–Aஇன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி வினவிய போது எதிரி மறுத்துள்ளார். அதனால் அரசுத்தரப்பு சாட்சியங்கள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் :**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4.1.** அ.சா.1 ஆனந்தன் என்பவர் தனது சாட்சியத்தில், கடந்த 2024ஆம் வருடம் ஒருநாள் இரவு 07.00 மணியளவில் தன் மகனான சாலமன் ராஜா சாலையை கடக்க வேண்டி நின்று கொண்டிருந்தவர்மீது வாழைக்காய் லோடு ஈச்சர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தன் பக்கத்து வீட்டு நபர் தகவல் சொன்னதன் பெயரில் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, அவரை அன்னூர் மருத்துவமனைக்கு ஏற்கனவே எடுத்து சென்றுவிட்டிருந்ததாகவும், தான் மருத்துவமனைக்கு சென்றபோதே அவர் உயிருடன் இல்லை என்றும், இவ்வழக்குப் புகாரினை தான் தான் கொடுத்ததாகவும், ஆனால் தனது



VENKATACHALAM MONIKA Digitally signed by VENKATACHALAM MONIKA Date: 2026.04.15 18:50:25 +0530

மகன் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநர் யாரென்று தெரியாது என்றும், விபத்து எப்படி ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**4.2.** அ.சா.2 அன்னாள் தனது சாட்சியத்தில், சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் இரவு 07.30 மணியளவில் தன் மகனான சாலமன் ராஜா சாலையை கடக்க வேண்டி நின்று கொண்டிருந்தவர்மீது வாழைக்காய் லோடு டெம்போ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தன் அண்ணா தகவல் சொல்லி அன்னூர் மருத்துவமனைக்குத் தன்னை அழைத்து சென்றபோதே அவர் உயிருடன் இல்லை என்றும், தனது மகன் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநர் யாரென்று தெரியாது என்றும், விபத்து எப்படி ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**4.3.** அ.சா.3 குமாரசாமி தனது சாட்சியத்தில், கடந்த 10.01.2024–ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் தாலுக்கா அலுவலகம் அருகே உள்ள டீ கடையில் தான் டீ குடித்து கொண்டிருந்தபோது, விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டு தான் சென்று பார்த்ததாகவும், அப்போது வாழைக்காய் லோடு டெம்போ வேன் தனது தங்கை மகன் மீது மோதியிருந்தது என்றும் அவர் ரோட்டை கடக்க நின்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது என்று சொன்னார்கள் என்றும், அந்த சமயத்தில் வேனின் ஓட்டுநரை பார்த்திருந்தபோதிலும், தான் பதற்றத்தில் இருந்ததால் தற்போது அவரை அடையாளம் காட்ட இயலாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.


VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:50:33 +0530

**4.4.** அ.சா.4 சரவணன் மற்றும் அ.சா.5 ரமேஷ்குமார் ஆகியோர் தங்களது சாட்சியத்தில், அன்னூர் தாலுக்கா அலுவலகம் அருகே விபத்து நடைபெற்றிருந்த இடத்தினை தங்கள் முன்னிலையில் போலீசார் விசாரித்து, பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதன் தொடர்ச்சியாக தாங்கள் இருவருமே பார்வை மகஜரில் கண்டுள்ள தங்கள் கையொப்பத்தினை செய்து கொடுத்தோம் என்றும் சாட்சியமளித்துள்ளார்கள். அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.6 காவல் உதவி ஆய்வாளர் தன் சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மேற்கொண்ட புலன் விசாரினையினைப் பற்றி சாட்சியமளித்துள்ளார்.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரியை பாதிக்கும் அம்சங்கள் குறித்து பா.ந.சு.ச. 351ன்படி வினவியபோது, சாட்சிகளின் சாட்சியங்களை எதிரி பொய் என்று மறுத்துவிட்டார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு காண வேண்டிய எழுவினா–</u>**

இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304–Aஇன் கீழான குற்றாச்சாட்டு குறித்து அரசு தரப்பில் சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.


VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:50:41 +0530

**7.தீர்வு :**

**7.1.** கடந்த 10.01.2024-ம் தேதி இரவு 19.20 மணிக்கு அன்னூர் காவல் நிலைய சரகம், அன்னூர் - சத்தி ரோட்டில் முனியப்பன் கோவில் அருகே சாலமன்ராஜா என்பவர் TN 37 CY 8994 என்ற பதிவெண் கொண்ட HERO PASSION PRO இரு சக்கர வாகனத்தில் கிழக்கிருந்து மேற்காக ரோட்டை கடக்க வேண்டி ரோட்டோரமாக நின்று கொண்டிருந்தபோது இவ்வழக்கின் எதிரியான அம்மாசை என்பவர் TN 37 AM 1188 என்ற பதிவெண் கொண்ட SUPRIME ISUIO என்ற நான்கு சக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சாலமன் ராஜா என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி அதன் தொடர்ச்சியாக அவர் இறந்து போக எதிரி காரணமாக இருந்துள்ளதால், எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304-A பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.2.** இந்த வழக்கில் அரசு தரப்பில் மொத்தம் 6 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் அ.சா.1 இறந்து போன நபரின் தந்தை மற்றும் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.2 இறந்துபோன நபரின் தாய் மற்றும், பிரேத விசாரணை சாட்சிகளாவார்கள். அ.சா.3 வழக்கு சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சி. அ.சா.4 மற்றும் 5 இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.6 இவ்வழக்கின் புலன் விசாரணைப்பற்றி சாட்சியமளித்துள்ள காவல் உதவி ஆய்வாளர் ஆவார்.

VENKATACHALAM MONIKA

Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:50:48 +0530

**7.3.** பொதுவாக ஒரு எதிரியின் மீது சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றத்தையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திடவேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். எனவே இவ்வழக்கின் எதிரி மீது சாட்டப்பட்ட குற்றங்களான இ.த.ச பிரிவுகள் 279, 304–Aஇன் கீழான குற்றங்கள் குறித்து அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் ஆராயப்பட்டது.

**7.4.** எதிரி மீது சாட்டப்பட்டுள்ள ஒரு குற்றமான இ.த.ச பிரிவு 279இன் கீழான குற்றத்தை நிரூபணம் செய்ய வேண்டி அமையப் பெற்றிருக்க வேண்டிய உட்கூறுகள்–

1. ஒருவர் ஒரு வாகனத்தை பொது வெளியில் முரட்டுத்தனமாகவோ அல்லது கவனக்குறைவாகவோ ஓட்டியிருக்க வேண்டும்;
2. மேற்படி செயல் ஒருவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையிலோ அல்லது ஒரு நபருக்கு காயம் ஏற்படுத்தும் வகையிலோ அமைந்திட வேண்டும்.

**7.5.** எதிரி மீது சாட்டப்பட்டுள்ள ஒரு குற்றமான இ.த.ச பிரிவு 304–Aஇன் கீழான குற்றத்தை நிரூபணம் செய்ய வேண்டி அமையப்பெற்றிருக்க வேண்டிய உட்கூறுகள்–

1. ஒருவருக்கு மரணம் ஏற்பட்டிருக்க வேண்டும்;
2. மேற்படி மரணமானது ஒருவரின் ஏதேனும் ஒரு முரட்டுத்தனமான செயல் அல்லது கவனக்குறைவான செயலால் ஏற்பட்டிருக்க வேண்டும்;
3. மேற்படி செயலானது மரணம் விளைவிக்கக் கூடிய குற்றமாக இருந்திருக்க கூடாது.



VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:50:57 +0530

**7.6.** இ.த.ச பிரிவு 304–Aஇன் கீழான உட்கூறுகள், இ.த.ச பிரிவு 279இன் கீழான உட்கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது தெளிவாகிறது. இரண்டு குற்றங்களுக்குமே ஒருவரது முரட்டுத்தனமான அல்லது கவனக்குறைவான செயல் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பது பொதுவானது. அந்த முரட்டுத்தனமான அல்லது கவனக்குறைவான செய்கையால் மற்றொரு நபருக்கு மரணத்தை ஏற்படுத்தியிருந்தால் அது இ.த.ச. பிரிவு 304–Aஇன் கீழான குற்றமாக அமையப்பெறும். இவ்வாறு எதிரிக்கெதிராக சாட்டப்பட்டுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளுக்கும் பொதுவான உட்கூறுகளாக எதிரி ஒரு வாகனத்தை இயக்கி இருக்க வேண்டும். அவ்வாறு இயக்கும்போது முரட்டுத்தனமாகவோ அல்லது கவனக்குறைவாகவோ வாகனத்தை இயக்கி இருக்க வேண்டும். தற்போது இவ்வழக்கில் எதிரிக்கெதிராக சாட்டப்பட்ட மேற்கூறிய இரண்டு குற்றங்களுக்கான பொதுவான அடிப்படை கூறுகள் பற்றி அரசு தரப்பு சாட்சிகள் ஆராயப்படுவதற்கு முன்னர், எதிரிதான் இவ்வழக்குச் சம்பவ தினத்தன்று இவ்வழக்கு விபத்து தொடர்புடைய வாகனத்தை ஓட்டிச் சென்ற நபர் என்று சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பொருத்து கவனிக்க வேண்டியது அவசியமாகிறது.

**7.7**. இந்த வழக்கில் அரசு தரப்பில் விபத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.3 விபத்து நடைபெற்ற சமயத்தில் தான் ஓட்டுநரை நேரில் பார்த்திருந்தபோதிலும், அப்போது தான் பதற்றத்தில் இருந்ததால் அவர் யாரென்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 புகாரில் எதிரியைப்பற்றி குறிப்பிட்டிருந்தபோதிலும், நீதிமன்ற சாட்சியத்தில் வாகனத்தின் ஓட்டுநர் யாரென்று


VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:51:09 +0530

தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். மற்ற எந்தவொரு அரசு தரப்பு சாட்சியுமே வழக்கு விபத்து தொடர்புடைய நான்கு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் யாரென்பதைப் பொருத்து எந்தவொரு சாட்சியத்தையும் முன்னிலைப்படுத்திடவில்லை. எனவே, அரசு தரப்பு இவ்வழக்கு விபத்தில் தொடர்புடைய நான்கு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் யாரென்பதைப் பொருத்து எந்த வகையிலும் நிரூபணம் செய்திடவில்லை.

**7.8.** இவ்வழக்கு விபத்து சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள அ.சா.3 தனது சாட்சியத்தில் விபத்து நடைபெற்ற சமயம் சத்தம் கேட்ட பின்னர்தான் சம்பவ இடம் சென்று தான் பார்த்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் தனக்கு விபத்து தொடர்பாக நேரடியாக எதுவும் தெரியாது என்றும் கேள்விப்பட்டுதான் தெரிந்துகொண்டேன் என்று ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். அதே சமயம் அ.சா.1 மற்றும் அ.சா. 2 ஆகியோர் விபத்து சம்பவம் பற்றி தங்களுக்கு கேள்விப்பட்டுதான் தெரியும் என்று சாட்சியமளித்துள்ளார்கள். வேறு எந்தவொரு சாட்சியுமே விபத்து நடந்ததைத் தாங்கள் நேரடியாக பார்த்ததாக சாட்சியம் எதுவும் அளித்திடவில்லை. இந்த நிலையில் எதிரிதான் வழக்கு விபத்தோடு தொடர்புடைய நான்கு சக்கர வாகனத்தினை ஓட்டி சென்றதாக நிரூபணம் செய்திடாத நிலையில், எதிரி வழக்கு விபத்து சம்பவம் நடைபெற்ற சமயத்தில் விபத்தோடு தொடர்புடைய வாகனத்தினை அதிவேகமாகவோ அல்லது அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ ஓட்டி வந்தார் என்பதைப் பொருத்து எந்தவொரு சாட்சியுமே சாட்சியமளிக்காதபோது, வழக்கு விபத்து


VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:51:21 +0530

சம்பவத்திற்கு எதிரிதான் காரணமென்று ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியம் எதுவுமே அரசு தரப்பால் முன்னிலைப்படுத்திடவில்லை.

**7.9.** மேலே கண்டுள்ளவாறு வழக்கு விபத்து சம்பவத்தினைக் கண்ணுற்ற சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இந்த வழக்கு விபத்து நடைபெற்றதற்கான காரணம் என்ன என்பதைப் பொருத்து எந்தவொரு தெளிவும் கிடைத்திடவில்லை. மேலும், எதிரியின் அதிவேகமான அல்லது அஜாக்கிரதையான அல்லது கவனக்குறைவான வாகனம் ஓட்டும் செயல்தான் இந்த விபத்திற்கு காரணம் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் எந்தவொரு சாட்சியும் சாட்சியமளித்திடவில்லை. இந்த நிலையில் இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள விபத்து சம்பவத்திற்கு எதிரியின் கவனக்குறைவான அல்லது அஜாக்கிரதையான வாகனம் ஓட்டும் செயல் காரணம் என்பதை அரசு தரப்பு நிரூபணம் செய்ய தவறிவிட்டது.

**7.10.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் வாயிலாக விபத்து நடைபெற்ற விதம் குறித்து எந்தவொரு தெளிவும் கிடைத்திடவில்லை. இந்த நிலையில் அரசு தரப்பு சாட்சிகளின் வாயிலாக எதிரிக்கெதிராக சாட்டப்பட்டுள்ள குற்றசாட்டுகள் எதுவுமே தெளிவாக நிரூபணம் செய்திடாத நிலையில் ஒரு சாலை விபத்து ஏற்பட்டு அதன் விளைவாக ஒரு நபர் உயிரிழந்திருந்துள்ளதால் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரி தான் இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றத்தினை செய்திருப்பார் என்று இந்த நீதிமன்றம் அனுமானம் கொள்ள இயலாது. அதனால், அரசுத்தரப்பில் எதிரிக்கெதிராக சாட்டப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279, 304-Aஇன் கீழான குற்றச்சாட்டுகளின்


VENKATACHALAM MONIKA
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:51:29 +0530

உட்கூறுகள் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் அரசுத்தரப்பு வழக்கின் மேல் எழுந்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்க இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, எதிரி இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 279, 304–Aஇன் கீழ் குற்றவாளி இல்லை என்று பாரதிய நகரிச் சுரக்ஷா சன்ஹிதா சட்டப் பிரிவு 278(1)இன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இந்த வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எனவே அதைப் பொருத்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாளான இன்று என்னால் நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VENKATACHALAM MONIKA

Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:51:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

**அரசு தரப்பு சாட்சிகள்** :

| **வ.எண்.** | **சாட்சிகள்** | **பெயர்கள்** |
|---|---|---|
| 1 | அ.சா.1 | ஆனந்தன். |
| 2 | அ.சா.2 | அன்னாள். |
| 3 | அ.சா.3 | குமாரசாமி. |

| | | |
|---|---|---|
| 4 | அ.சா.4 | சரவணன். |
| 5 | அ.சா.5 | ரமேஷ்குமார். |
| 6 | அ.சா.6 | கருப்புசாமி, காவல் உதவி ஆய்வாளர். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்** :

| **வ.எண்.** | **சான்றாவணங்கள்** | **ஆவணங்கள்** |
|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார். |
| 2 | அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் கண்டுள்ள முதலாவது கையொப்பம் அ.சா.4இன் கையொப்பம். |
| 3 | அ.சா.ஆ.3 | பார்வை மகஜரில் கண்டுள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.5இன் கையொப்பம். |
| 4 | அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை. |
| 5 | அ.சா.ஆ.5 | பார்வை மகஜர். |
| 6 | அ.சா.ஆ.6 | மாதிரி வரைபடம். |
| 7 | அ.சா.ஆ.7 | பிரேத விசாரணை அறிக்கை. |
| 8 | அ.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை. |
| 9 | அ.சா.ஆ.9 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை. |
| 10 | அ.சா.ஆ.10 | உடற்கூராய்வு சான்று. |

**அரசு தரப்பு சான்று பொருள்கள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள்** : இல்லை.

VENKATACHALAM MONIKA

Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.04.15 18:51:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

**குறிப்பு :**

1. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. வழக்குச்சொத்து ஏதும் இல்லை.